**இந்திய தூதரகம்**
**கோலாலம்பூர், மலேசியா**

## செய்தி அறிக்கை

**இந்திய வம்சாவளி நபர் அட்டையிலிருந்து (PIO) வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு (OCI) மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் இறுதிநாள் டிசம்பர் 31, 2017**

**இந்திய வம்சாவளி நபர் அட்டையிலிருந்து (PIO) வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு (OCI) மாற்றம் செய்ய விண்ணப்பிக்கும் இறுதிநாள் டிசம்பர் 31, 2017** என இந்திய தூதரகம் அறிவித்துள்ளது. ஆகையால், இன்னும் வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு (OCI) மாற்றம் செய்ய விண்ணப்பிக்காதவர்கள் **டிசம்பர் 29,2017ஆம் தேதிக்குள் (டிசம்பர் 30&31,2017 விடுமுறை)** தங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு இந்திய தூதரகம் கேட்டு கொள்கிறது.

அக்டோபர் மாதம் 2018ஆம் ஆண்டு முதல், இயந்திரம் வாசிக்கக்கூடிய பயண ஆவணங்கள் (Machine Readable Travel Documents) மட்டுமே ஏற்கத்தக்கதாக இருக்கும் என்று சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு அறிவித்துள்ளது. 2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குப் பிறகு, இந்திய வம்சாவளி நபர் அட்டையை (PIO) வைத்துக் கொண்டு இந்தியாவிற்குப் பயணம் செய்பவர்கள் இந்தியக் குடிநுழைவு கவுண்டர்களில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர்கள் மீண்டும் தங்களது தாயகத்திற்கே திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று தூதரகம் அறிவித்துள்ளது.

டிசம்பர் 29,2017ஆம் தேதிக்குள், வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு (OCI) மாற்றம் செய்ய **இலவசம்** என இந்திய தூதரகம் தமது அறிக்கையில் அறிவித்துள்ளது. **காலக்கெடு முடிவடைந்த பிறகு (டிசம்பர் 29,2017) இந்திய வம்சாவளி நபர் அட்டையிலிருந்து (PIO) வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு (OCI) மாற்றம் செய்ய விண்ணப்பிப்பவர்களுக்கு ரிங்கிட் மலேசியா 1245 வெள்ளி கட்டணம் விதிக்கப்படும்.** அதாவது புதிய வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு விண்ணப்பிக்கும் கட்டணத்திற்குச் சமமாகும். ஆகையால், வெளிநாட்டு இந்திய குடியுரிமை அட்டைக்கு இன்னும் விண்ணப்பிக்காத இந்திய வம்சாவளி நபர் அட்டை வைத்திருப்பவர்கள் (PIO) (https://passport.gov.in/oci) என்ற இணைய இணைப்பின் மூலம் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அதனுடன், விண்ணப்பதாரர்களின் (2x2 அளவிலான வெள்ளை நிற பின்புலத்துடன் கொண்ட) புகைப்படம், கையொப்பம், மலேசியா / வெளிநாட்டு கடப்பிதழின் நகல், மற்றும் இந்திய வம்சாவளி நபர் அட்டையின் (PIO) முதல் மற்றும் கடைசி பக்கம் ஆகியவற்றை விண்ணப்பம் செய்யும் போது பதிவேற்றம் செய்ய வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபாரத்தை இந்திய துதரகத்தில் சமர்ப்பிக்க வரும்பொழுது மலேசியா / வெளிநாட்டு கடப்பிதழின் அசல் மற்றும் அச்சுப்பிரதியும் மற்றும் இந்திய வம்சாவளி நபர் அட்டையையும் (PIO) உடன் கொண்டு வர வேண்டும். இந்த விண்ணப்பங்கள் Menara 1 Mon't Kiara, Level 28, No. 1, Jalan Mon't Kiara, என்ற முகவரியிலுள்ள கோலாலம்பூர் இந்திய துதரகத்தில், திங்கள் முதல் வெள்ளிகிழமை வரை காலை 9.30லிருந்து பிற்பகல் 12.00 வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

மேல் விவரங்களுக்கும்/ தகவலுக்கும் www.indianhighcommission.my என்ற இணையத்தை அல்லது oci.kl@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்.

★★★★★